செய்தி வெளியீடு எண் : 2216 நாள் : 07.12.2022

**தமிழ்நாடு அரசின் தொழில்நுட்பம், தொழில்முனைவு மற்றும் திறன்களுக்கான முதன்மையான உச்சி மாநாடு. இது சுற்றுச்சூழலமைப்பின் சிறந்த வல்லுனர்களை ஒரே தளத்தில் ஒன்றிணைப்பதற்கான மாநாடு**

தமிழ்நாடு அரசின், தமிழ்நாடு மின்னணு நிறுவனம் (ELCOT), தொழில்நுட்பம் மற்றும் புத்தாக்கம் குறித்த ஆசியாவின் மிகப்பெரிய உச்சி மாநாட்டை சென்னை வர்த்தக மையத்தில் மார்ச் 23–25, 2023 தேதிகளில் ஏற்பாடு செய்துள்ளது.

தமிழ்நாடு 2030 ஆம் ஆண்டுக்குள் டிரில்லியன் டாலர் பொருளாதாரத்தை எட்ட விரும்புகிறது. யூமாஜின் சென்னை '23 இந்த குறிக்கோளை அடையும் முக்கிய முயற்சிகளில் ஒன்றாகும். கொள்கை வகுப்பாளர்கள், தலைமை அனுபவ அதிகாரிகள் (CXOs), முன்னணி தொடக்கத் தொழில்முனைவோர், தொழில்நுட்ப வல்லுநர்கள், திறன் மேம்பாட்டாளர்கள், கல்வியாளர்கள், சிந்தனைத் தலைவர்கள் மற்றும் தொழில்நுட்பத் துறைகளின் பிரதிநிதிகள் ஒன்றுகூடி விவாதித்து தொழில்நுட்பம் மற்றும் தொழில்முனைவு சுற்றுச்சூழல் அமைப்பின் வளர்ச்சி மற்றும் மேம்பாட்டிற்கான எதிர்கால பாதைகளை யூமாஜின் பரிந்துரைக்கும். இந்த மாநாடு 250 க்கும் மேற்பட்ட முன்னோடிகள் மற்றும் பத்தாயிரத்திற்கும் மேற்பட்ட பிரதிநிதிகள் ஒன்று கூட வாய்ப்பு அளிக்கும். மூன்று நாட்கள் நடைபெறும் இந்த மாநாட்டில் முக்கிய குறிப்புகள், முதலீட்டு களம், குழு விவாதங்கள், ஆர்வமூட்டும் விவாதங்கள், தயாரிப்பு காட்சிகள், தொழில்நுட்ப காட்சிகள் மற்றும் சிறந்த ஆளுமையாளர்களின் சிந்தனை அறிக்கைகள் வெளியீடு ஆகியவை இடம்பெறும்.

இந்த உச்சிமாநாடு முதன்முறையாக புகழ்பெற்ற "புளூ ஓஷன் விருதுகளை" இந்தியாவுக்குக் கொண்டுவருகிறது. திருமதி. லிஸ் டால்போட் பாரே, பாண்டிச்சேரி மற்றும் சென்னையில் உள்ள பிரான்ஸ் நாட்டின் கான்சுல் ஜெனரல் (Consul General), தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் திரு. த. மனோதங்கராஜ் மற்றும் டாக்டர் நீரஜ் மித்தல், தமிழக அரசின் தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறையின் முதன்மைச் செயலர் ஆகியோர் முறைப்படி யூமாஜின் சென்னை மாநாட்டின் பங்குதாரர் நாடாக பிரான்ஸ் நாட்டை அறிவித்து ப்ளூ ஓஷன் விருதுகளின் இந்திய பதிப்பை டிசம்பர் 8, 2022 அன்று செய்தியாளர் கூட்டத்தில் துவக்கி வைக்கிறார்கள். ப்ளூ ஓஷன் விருதுகள் இந்தியாவில் முதன் முறையாக அறிமுகப்படுத்தப்படுவதாக டாக்டர் நீரஜ் மித்தல் அவர்கள் அறிவித்தார்கள். ஆழ்தொழில்நுட்ப தொழில்முனைவோர் தங்கள் யோசனைகளை உலகளவில் எடுத்துச் செல்ல இவ்விருதுகள் தொடக்கக் களமாக இருக்கும்.

ப்ளூ ஓஷன் விருதுகள் பிட்ச்சிங் போட்டியில் வெற்றி பெறுபவர்களுக்கு வழங்கப்படும். இவ்விருதுகள் சர்வதேச நடுவர் குழுவினால் மதிப்பீடு செய்யப்பட்டு மூன்று பிரிவுகளில் வழங்கப்படும். பேபி பிரிவு (2 மில்லியன் யூரோக்களுக்கு குறைவான முதலீடுகள் கொண்ட தொடக்க நிறுவனங்கள்), வழிகாட்டி பிரிவு (2 மில்லியன் யூரோக்களுக்கு அதிகமான முதலீடுகள் கொண்ட தொடக்க நிறுவனங்கள்), மற்றும் சொசைட்டல் பிரிவு (சமூகத்தில் நேர்மறையான தாக்கங்கள் கொண்ட புதிய சந்தையை உருவாக்கும் தொடக்க நிறுவனங்கள்). இவ்விருதுகளுக்கு பரிந்துரைப்பதற்கான இறுதிநாள் ஜனவரி 31, 2023 ஆகும். (இணையதள முகவரி: https://umaginechennai.com/programs/blueoceanawards )

பிரான்ஸ், இந்தோ–பிரெஞ்சு சேம்பர் ஆஃப் காமர்ஸ் (IFCC) மற்றும் லா பிரஞ்ச் டெக், எஸ்.டி.பி.ஐ, ஐ.சி.டி அகாடமி, ஐஐடிஎம் ஆராய்ச்சி பூங்கா, iTNTஹப், வாத்வானி அறக்கட்டளை, தி / நட்ஜ் நிறுவனம், ஸ்டார்ட்அப் TN (Startup TN), ISBA, உபர்சாகா (Ubersaga), இந்தியன் ஏஞ்சல் நெட்வொர்க் (Indian Angel Network), தி சென்னை ஏஞ்சல்ஸ் (The Chennai Angels), யு.எஸ்–இந்தியா ஸ்ட்ராட்டஜிக் பார்ட்னர்ஷிப் ஃபோரம் (US–India Strategic Partnership Forum) மற்றும் இந்தியாஸ்போரா ஆகிய நிறுவனங்கள் யூமாஜின் சென்னை '23–இன் பங்குதாரர்களாகும்,

இம்மாநாட்டின் நிகழ்வு பங்குதாரர் இந்திய தொழில் கூட்டமைப்பு (CII) மற்றும் ஆதரவு பங்குதாரர் மொபைல் அசோசியேஷன் ஆஃப் இந்தியா (IAMAI).

யூமாஜின் சென்னை '23–இன் ஆலோசகர்களாக புகழ்பெற்ற ஆளுமைகளை உள்ளடக்கிய திரு. அமித் நாராயண், நிறுவனர் மற்றும் தலைமை செயல் அதிகாரி, Autogrid Systems; Ms. அருணா சுந்தரராஜன், முன்னாள் செயலாளர், ஸ்டீல், ஐடி மற்றும் டெலிகாம், இந்திய அரசு; Prof. அசோக் ஜுன்ஜுன்வாலா, தலைவர் , ஐஐடிஎம் ஆராய்ச்சி & ஐஐடிஎம் இன்குபேஷன் செல், ஐஐடிஎம் ஆராய்ச்சி பூங்கா; திரு. அவ்னிஷ் சபர்வால், நிர்வாக இயக்குனர், அக்சென்ச்சர் வென்ச்சர்ஸ் & ஓபன் இனோவேஷன்; திரு. தீபக் பாக்லா, தலைவர், முதலீட்டு ஊக்குவிப்பு முகமைகளுக்கான உலகசங்கம்; திரு. கணபதி கங்காதரன் எஸ், தலைமை புதுமை சுவிசேஷகர், தகவல் தொடர்பு, ஊடகம், பொழுதுபோக்கு, தகவல் சேவைகள் பிரிவு, டாடா கன்சல்டன்சி சர்வீசஸ்; திரு. கெவின் ஜார்ஜ், கவுன்சில் உறுப்பினர் – எதிர்கால தகவல்தொழில் நுட்பம் மற்றும் வளர்ந்துவரும் தொழில் நுட்பங்கள், தமிழக அரசு; திரு. கிரிஸ் கோபாலகிருஷ்ணன், தலைவர், ஆக்சிலர் வென்ச்சர்ஸ் & இணை நிறுவனர்,

இன்ஃபோசிஸ்; திரு. எம். மாதவன் நம்பியார், முன்னாள் செயலாளர், மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் அமைச்சகம் (MeitY), சிவில் ஏவியேஷன், இந்திய அரசு; திரு. எம். ஆர். ரங்கஸ்வாமி, நிறுவனர், இந்தியாஸ்போரா, கார்ப்பரேட் ஈகோ ஃபோரம் & இணை நிறுவனர், சேண்ட் ஹில் குரூப் (Sand Hill Group); திரு. மித்தன் மேத்தா, குளோபல் அலையன்ஸ் அதிகாரி – Google Cloud, Fractal.ai; Ms. பத்மஜா ரூபரேல், இணை நிறுவனர் & தலைவர், இந்திய ஏஞ்சல் நெட்வொர்க் (IAN); Ms. பிரியா ராஜன், நிர்வாக இயக்குனர், சிலிக்கான் வேலி பேங்க்; திரு. ரஜத் டாண்டன், தலைவர், இந்திய பிரைவேட் ஈக்விட்டி & துணிகர மூலதன சங்கம் (IVCA); திரு. ராஜேஷ் அபிசந்தனி, தலைவர் – ரிஸ்க் மற்றும் கம்ப்லையன்ஸ், பாரத் FIH; திரு. ரவி அரோரா, துணைத் தலைவர், குரூப் இன்னோவேஷன், டாடா சன்ஸ்; திரு. சத்யகம் ஆர்யா, நிர்வாக இயக்குனர் & CEO, டெய்ம்லர் இந்தியா கமர்ஷியல் வேகிக்ல்ஸ்; Prof. சௌமித்ரா தத்தா, டீன், செய்ட் ஸ்கூல் ஆஃப் பிசினஸ், (Said School of Business) ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகம் மற்றும் Prof. வி. காமகோடி, இயக்குனர், ஐஐடி மெட்ராஸ்.

**<u>யூமாஜின் சென்னை '23 சிறப்பம்சங்கள்</u>:**

3 நாட்கள் | 7 தடங்கள் | 100**+** அமர்வுகள் | 150**+** கண்காட்சியாளர்கள் | 250**+** பேச்சாளர்கள் | 10K**+** பிரதிநிதிகள் பசுமை போக்குவரத்து, டிஜிட்டல் எதிர்காலம், அக்ரிநெக்ஸ்ட், காலநிலை, மாற்றம் மற்றும் நிலைத் தன்மை, சுகாதாரம் & வாழ்க்கை அறிவியல், புதிய எல்லைகள் மற்றும் நன்மைக்கான தொழில்நுட்பம் ஆகிய ஏழு பகுதிகளில் கவனம் செலுத்தி செயற்கை நுண்ணறிவு (AI) இயந்திர வழி கற்றல் (ML), தரவு அறிவியல் (Data Sciences), Blockchain, வெப்3

(Web3), இணைய பாதுகாப்பு (Cyber Security), ஆகுமெண்டட் ரியாலிட்டி (AR), வெர்சுவல் ரியாலிட்டி (VR), மற்றும் அட்வான்ஸ் கனெக்டிவிட்டியான 5G/6G போன்ற தொழில் நுட்பங்களை காட்சிபடுத்தும்.

யூமாஜின் சென்னை '23 பற்றிய கூடுதல் தகவலுக்கு: https://umaginechennai.com என்ற இணையதளத்தை பார்வையிடவும்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in